**தலைப்பு 224 – இலங்கை வான்படை**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை வான்படையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை வான்படையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 08 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூலை 06 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை வான்படையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை வான்படையால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் இலங்கை வான்படை அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் இலங்கை வான்படையின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின்

செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கப்படும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரை அமுல்ப்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

### (அ) வருமான பெறுவனவு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டிற்குரிய ரூபா 3,301,895 கூட்டுமொத்தமான விமான வாடகை வருமானம் அந்த ஆண்டின் வருமானமாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | ரூபா 3,301,895 விமான வாடகை வருமானம் 2021 திசெம்பரில் மேற்கொள்ளப்பட்ட வணிக விமான நடவடிக்கைகளுக்காக பெறப்பட்டதுடன் அந்த பணம் 2022 சனவரியில் கணக்கிற்கு கொண்டு வரப்பட்டிருந்தது. | நடைமுறை ஆண்டுக்கான வருமானம் சரியாக இனங்காணப்பட்டு கணக்கிற்கு கொண்டு வரப்பட வேண்டும். |
| (ii) | ஹெலிடூர்ஸ் லிமிட்டட்டின் அறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது வருமானத் தலைப்பு 20.03.02.16 தொடர்பான விமான வாடகை வருமானம் ரூபா 13,402,123 கூட்டுமொத்தமாக காணப்பட்ட போதிலும் வருடாந்த நிதிக் கூற்றுக்களில் (படிவம் ACA-F) இது ரூபா 10,574,308 ஆக கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் ரூபா 2,827,815 கூட்டுமொத்தமான வருமானம் கணக்குகளில் குறைவாகக் காட்டப்பட்டுள்ளது. | ஹெலிடூர்ஸ் லிமிட்டட் 2021 ஆம் ஆண்டில் ரூபா 10,100,225 விமான வாடகை வருமானத்தை அரசாங்கக் கணக்கிற்கு செலவு வைத்திருந்ததுடன் அதில் ரூபா 3,301,896 விமான வாடகை வருமானம் 2021 திசெம்பருடன் தொடர்புடையதாக உள்ளதுடன் அந்த பணம் 2022 சனவரியில் கணக்கிற்கு கொண்டு வரப்பட்டிருந்தது. | -மேற்படி- |

### (ஆ) மூலதன செலவினம்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் மூலதனச் செலவினத்தில் உள்ளடக்கப்பட்ட மூலதனச் சொத்துக்களை கையகப்படுத்தல் | நிதி செயலாற்றல் கூற்றின் பிரகாரம் சொத்துக்களை கையகப்படுத்துதலாக குறிப்பிடப்பட்ட ரூபா 1,265,628,114 பெறுமதியில் | அரச கணக்குகள் சுற்றறிக்கைகளில் குறிப்பாகக் கூறப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் |

| | | | |
|---|---|---|---|
| | கிரயம் ரூபா 1,265,628,114 அக காணப்பட்ட போதிலும் அந்த பெறுமதி படிவம் ACA 6 இல் ரூபா 935,582,119 நிதியல்லாத சொத்துக்களை கையகப்படுத்தல் செலவினமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ரூபா 330,045,995 தொகையான நிதியல்லாத சொத்துக்களை கையகப்படுத்துதல் மற்றும் கொள்வனவு செய்தல் நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளடக்கப்பட்ட ரூபா 285,642,470 தொகை செலவின விடய இல. 2014 இன் கீழ் நடைமுறை வேலை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கொள்வனவிற்குரிய செலவினமாகும். | மற்றும் வழிகாட்டலின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ii) | படிவம் ACA 6 இன் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறை வேலையாக காணப்பட்ட ரூபா 929,278,775 மீதி மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியாக சீராக்கம் செய்யப்பட்டிருந்தது. | 2021.11.26 இல் அரச கணக்குகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட 2021/03 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டலில் உள்ள ACA 06 இன் பிரகாரம் இது அறிக்கையிடப்பட்டுள்ளது. | -மேற்படி- |

**(இ) ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

ஆதனம், பொறி மற்றும் உபகரணத்திற்கான கணக்கீடு தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | காணிகளின் புதிய மதிப்பீட்டிற்கான ஆரம்பக் கிரயம், மாற்றங்கள் மூலம் நீக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 329,000,000 கூட்டுமொத்த தொகையை நீக்குதல் ACA 6 படிவத்தில் அகற்றல்களாக உள்ளடக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் காணிகளை அகற்றியதாக படிவத்தின் மூலம் ஒரு பிழையான வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | அரச கணக்குகள் திணைக்களம் தேவையான புதுப்பித்தல்களை செய்திருக்காததுடன் ஒன்லைனில் (online) சொத்துக்களை உள்ளிடுவதற்குத் தேவையான மென்பொருளில் மாற்றமொன்றாக மேலதிகங்களை சேர்த்தல் அல்லது தொடர்புடைய பெறுமதிகளை உள்ளடக்குவதற்கான வசதிகள் வழங்கப்பட்டிருக்காததுடன் இது இந் நிலைமைக்கு பங்களித்திருந்தது. அந்த குறைபாடு தொடர்பாக அரச கணக்குகள் திணைக்களத்திற்கு தெரியப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | அரச கணக்குகள் சுற்றறிக்கைகளில் குறிப்பாகக் கூறப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டலின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அதிகாரம் பெறப்படாமல் இடிக்கப்பட்ட 08 கட்டிடங்களின் ரூபா 20,594,200 ஆரம்ப கிரயம் படிவம் ACA 6 இல் உள்ள கட்டிட மீதிகளில் இருந்து அகற்றப்பட வேண்டிய போதிலும் இது 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டிடங்களின் இறுதி மீதியில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் பௌதீக ரீதியாக காணப்படாத சொத்துக்கள் படிவம் ACA 6 மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | ரூபா 20,594,200 ஆரம்ப கிரயத்துடன் கூடிய எட்டு கட்டிடங்கள் மீளாய்வாண்டின் இறுதியளவில் இடிக்கப்பட்டுள்ளன, இந்த இடித்தலுக்கான உரிய அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக இந்த விடயம் பாதுகாப்பு அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | -மேற்படி- |

### 1.6.2 கணக்காய்விற்கான சான்றின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இடமாற்றம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள், இடமாற்றத்தில் வந்தவர்கள், இறந்தவர்கள், ஓய்வு பெற்றவர்கள் மற்றும் சேவை வறிதாக்கப்பட்டவர்கள் ஆகியோரின் கடன் மீதிகள் அடங்கிய கடன் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் 05 ஆண்டுகளுக்கும் மேலாக தொடர்ந்து காணப்பட்ட ரூபா 9,707,517 தொகையான நிலுவை கடன் மீதிகளை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியவில்லை. | திணைக்களத்தில் இந்நோக்கத்திற்காக பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை, தற்போது பதிவேடு தயாரிக்கப்பட்டுள்ளது. | அரசாங்க உத்தியோகத்தர்களின் காலங்கடந்த மற்றும் நிலுவையாக உள்ள கடன் மீதிகளை சரியாக சித்தரிக்கும் பதிவேடொன்று நாளதுவரையாக்கப்பட்ட முறையில் பேணப்பட வேண்டியதுடன் நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 85 (1) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தர் வருமான மதிப்பீடுகளை முடிந்தவரை யதார்த்தமாகவும் சரியாகவும் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் | எதிர்காலத்தில் மிகவும் யதார்த்தமான மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் விமான எண்ணிக்கையின் மட்டுப்படுத்தல், குறைந்த கிரயத்துடன் தனியார் விமான | வருமான மதிப்பீடுகளைத் தயாரிப்பதில் மிகவும் யதார்த்தமான மற்றும் சரியான மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | வருமானத் தலைப்பு 20.03.02.16 இன் விமான வாடகை வருமான மதிப்பீடு மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 05 ஆண்டுகளின் போது 33 சதவீதத்திலிருந்து 91 சதவீதம் வரை குறைக்கப்பட்டு திருத்தப்பட்டிருந்தது. முன்னைய 05 ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட குறைப்பு 91 சதவீதமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | நிறுவனங்களை நிறுவுதல் மற்றும் கொவிட் 19 தொற்றுநோய் என்பன இந்த நிலைமைக்கு பங்களித்துள்ளன. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் மற்றும் அந்த வருமானத்தை அறவீடு செய்வதற்கு சரியான நேரத்தில் மற்றும் திறமையான நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்ப்படுத்த வேண்டும். |
| (ஆ) | விமான வாடகை வருமானமீட்டலின் வருமானத் தலைப்பு 20.03.02.16 இன் பிரகாரம் இலங்கை விமானப்படையின் வருடாந்த தேறிய வருமானமீட்டலில் 2016 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை சாதகமற்ற படிப்படியான குறைவு அவதானிக்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது வருமானம் 24 சதவீதத்திலிருந்து 94 சதவீதம் வரை சாதகமற்ற குறைவுடன் மாறியிருந்தது. | விமான எண்ணிக்கையின் மட்டுப்படுத்தல், குறைந்த கிரயத்துடன் தனியார் விமான நிறுவனங்களை நிறுவுதல் மற்றும் கொவிட் 19 தொற்றுநோய் என்பன 2016 முதல் 2021 வரை விமான வாடகை வருமானம் படிப்படியாகக் குறைவடைவதற்கு முக்கிய காரணமாகும். | நிறுவனம் பெறவேண்டிய வருமானத்தை அறவீடு செய்வதற்கு ஒரு குறிப்பிட்ட வழிமுறையொன்றை உருவாக்கி அதன் பிரகாரம் வருமானத்தை முறையாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.2 செலவின முகாமைத்துவம்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 50(ii)(இ) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தர் மதிப்பீடுகள் முடிந்தவரை முழுமையாகவும் சரியாகவும் தயாரிக்கப்பட்டிருப்பதை உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆகையால் குறைநிரப்பு மதிப்பீடுகள் மூலம் நிதியேற்பாடுகள் மேலதிகமாக மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன் நி.பி. 66 மற்றும் 69 இன் கீழ் | கொவிட் சூழ்நிலை காரணமாக திட்டமிடப்பட்டவாறு இரண்டு மீண்டெழும் செலவின விடயங்களின் மேலதிக நிதியேற்பாடுகள் தொடர்பான பணிகளை பூர்த்தி செய்யத் தவறியமை மற்றும் அமைச்சரவை பத்திரங்களின் பிரகாரம் நான்கு மூலதன செலவின விடயங்கள் மூலம் பெறப்பட்ட ரூபா 2771 மில்லியன் நிதியேற்பாடுகளை பதிவழித்தமை என்பன இந்த நிலைமைக்கு பங்களித்திருந்தன. | நிதிப்பிரமாணம் 50 (ii) இன் பிரகாரம் குறிக்கோள்களின் செலவினம் தொடர்பாக சரியான மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தர் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதியேற்பாடு மாற்றப்பட வேண்டியிருந்தது. அதன் பிரகாரம் 02 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 04 மூலதன செலவின விடயங்களின் அசல் மதிப்பீடுகளின் எல்லை ரூபா 7,000,000 இலிருந்து ரூபா 3,196,256,600 வரை அல்லது 3.9 சதவீதத்திலிருந்து 140 சதவீதம் வரை குறைநிரப்பு மதிப்பீடுகள் மூலம் அதிகரிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 74 இன் பிரகாரம் திணைக்களத் தலைவர், சேவையின் தன்மை மற்றும் அளவு, அதன் மொத்த கிரயம் மற்றும் குறைநிரப்பு நிதியேற்பாடுகளுக்கான கோரிக்கைகளை முன்வைக்கும் போது தேவைப்படும் மேலதிக நிதியேற்பாட்டு தொகை ஆகியவற்றை இனங்காண வேண்டும். நிதிப்பிரமாணம் 78(3)(உ)(ii) இன் பிரகாரம் குறைநிரப்பு மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்ட நிதியாண்டின் எஞ்சிய காலத்தில் அதே சேவைக்கான மேலதிக செலவினங்களுக்குத் தேவையான தொகைக்கு நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும், மேற்படி விதிமுறைகளுக்கு முரணாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததால், தேவைகள் குறிப்பாக இனங்காணப்படாமல் குறைநிரப்பு மதிப்பீடுகள் கோரப்பட்டிருந்தன, ஆகையால் மீளாய்வாண்டின் இறுதியளவில் ரூபா 3,820,256,600 கூட்டுமொத்தமான 02 குறைநிரப்பு நிதியேற்பாடுகளை இரத்து செய்துவிட்டு அதற்கு பதிலாக ரூபா 1,810,256,600 குறைநிரப்பு நிதியேற்பாடு பெறப்பட்டது. அதன் பிரகாரம் ரூபா 2,010,000,000 குறைநிரப்பு நிதியேற்பாடு மீளாய்வாண்டின் இறுதியளவில் சாதகமற்ற முறையில் குறைக்கப்பட்டிருந்தது. | Kafir விமானங்களை பழுதுபார்ப்பதற்கான நாணயக் கடிதங்களை வழங்குவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக 2021 ஆம் ஆண்டில் திட்டமிட்டவாறு இரண்டாவது கொடுப்பனவு மேற்கொள்ளப்படாதமை, கொரோனா தொற்று காரணமாக பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதமை போன்ற காரணங்களால் குறைநிரப்பு நிதியேற்பாடுகளில் ரூபா 2010 மில்லியன் தொகை பொது திறைசேரிக்கு திருப்பி அனுப்பப்பட்டது, இதனால் இந்த நிலைமை ஏற்பட்டது. | நிறுவனத்தின் மேலதிக நிதியேற்பாட்டு தேவைப்பாடுகளை சரியாக இனங்கண்டு நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் செலவினங்களை மேற்கொள்வதற்கு தேவையான நிதிகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நிதியேற்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | வருடாந்த மதிப்பீட்டின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் பெறுகைத் திட்டம் என்பன தயாரிக்கப்பட்டு அதற்கிணங்க கட்டுநிதிகளை கோரி திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட வேண்டும். மேலும், பெறப்பட்ட நிதியேற்பாடுகள் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட வேண்டும். ஆனால் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படாததால், 10 மூலதன செலவின விடயங்கள் மற்றும் 07 மிண்டெழும் செலவின விடயங்கள் உட்பட 17 செலவின விடயங்களிற்காக பெறப்பட்ட ரூபா 20,488,316,600 மொத்த நிதியேற்பாடுகளில் ரூபா 9,940,088,786 நிதியேற்பாடு அல்லது 49 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கொவிட் தொற்றுநோய் நிலைமை, அமைச்சரவைப் பத்திரத்தின் பிரகாரம் திட்டமிடப்பட்ட செலவினங்களை பதிவழித்தல், கொழும்பு துறைமுக அபிவிருத்தி செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாததால் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டமை போன்ற காரணங்களால் நிதியேற்பாடுகள் குறைவாக பயன்படுத்தப்பட்டன. | எதிர்பார்க்கப்படும் இலக்குகளை முடிந்தவரை அடையும் வகையில் மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடுகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 06 மூலதன செலவின விடயங்களின் ரூபா 3,705,500,000 தொகையான 100 சதவீத மொத்த நிதியேற்பாடு பயன்படுத்தப்படாமல் முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது. அந்தத் தொகையில், 04 செலவின விடயங்களின் ரூபா 1,231,500,000 தொகையான நிதியேற்பாடு வருடாந்த மதிப்பீட்டின் மூலம் பெறப்பட்டிருந்ததுடன் 02 செலவின விடயங்களின் ரூபா 2,474,000,000 நிதியேற்பாடுகள் குறைநிரப்பு மதிப்பீடுகள் மூலம் பெறப்பட்டிருந்தன. | கொவிட் தொற்றுநோய் நிலைமை, அமைச்சரவைப் பத்திரத்தின் கீழ் திட்டமிடப்பட்ட செலவினங்களை பதிவழித்தல், Pakiathan கடன் திட்டம் தொடர்பான வழிகாட்டல் பெறப்படாமை மற்றும் 03 விமானங்கள் புனரமைப்பு செயற்திட்டம் இரத்து செய்யப்பட்டமை போன்ற காரணங்களால் நிதியேற்பாடுகள் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- |

## 2.3 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப்பிரமாணம் 94(2) இன் பிரகாரம் செலவின விடய இல. 224-1-3-1205 இற்கு செலவிடப்படுவதற்கு அனுமதிக்கப்பட்ட கடப்பாடுகளின் அதிகபட்ச எல்லை ரூபா 135,240,833 ஆக காணப்பட்ட போதிலும் நிதிக்கூற்றின் குறிப்பு (iv) மூலம் சமர்ப்பிக்கப்பட்ட பொறுப்புக்கள் கூற்றின் பிரகாரம் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 393,875,916 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் அதிகபட்ச கடப்பாட்டு எல்லையை ரூபா 258,635,033 ஆல் விஞ்சி ஏற்படுத்தப்பட்டிருந்தன. | வெளிநாட்டில் இருந்து வெடிமருந்துகள், இரசாயனங்கள், EJECTION SEAT CARTRIDGES போன்ற மூலப்பொருட்களை இறக்குமதி செய்யும் போது பெறுகை நடவடிக்கைகளுக்கு நீண்ட காலம் எடுக்க வேண்டியிருந்த சிக்கல்கள் காரணமாகவும் இலங்கை விமானப்படையின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட விடயங்கள் காரணமாகவும் 2021 ஆம் ஆண்டில் பெறுகை செயன்முறையை பூர்த்தி செய்யத் தவறியமை எல்லையை மீறி கடப்பாடுகள் ஏற்பட்டமைக்கான காரணமாகும். | அரச கணக்குகள் சுற்றறிக்கைகள் மற்றும் நிதிப்பிரமாணங்களில் குறிப்பாகக் கூறப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் மற்றும் வழிகாட்டலின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும் இஸ்ரேல் ஏரோஸ்பேஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிட்டட் என்ற வெளிநாட்டு கம்பனிக்கும் இடையே 2021 மே 02 இல் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 05 Kafir விமானங்களை பழுதுபார்ப்பதற்காக ஒப்பந்தம் செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 49,570,057 பெறுமதியில், ஐ.அ.டொலர் 7,435,508 (ரூபா 1,509,408,124) தொகை மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது. 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதமுள்ள ஐ.அ.டொலர் 42,134,549 (ரூபா 8,511,178,898) கடப்பாட்டு பொறுப்பானது கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் செலுத்தப்பட வேண்டிய தொகை மாத்திரமே செலவின விடயத்தின் கடப்பாடொன்றாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. மீதி 2022 ஆம் ஆண்டிற்கான கடப்பாடாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. 05 Kafir விமானங்களின் பழுதுபார்ப்புக் கட்டணங்களை கொடுப்பனவு செய்வதற்கான நிதிகள் வருடா வருடம் தவணை முறையில் பெறப்படுவதால், பொறுப்புக்களாக பதிவு செய்யப்பட வேண்டிய அவசியமில்லை. | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது மீளாய்வாண்டிற்குரிய அனைத்து பொறுப்புக்களும் கடப்பாடுகளும் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டும். |

## 2.4 முற்பணங்களை வழங்குதலும் தீர்ப்பனவு செய்தலும்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பண "பீ" கணக்கு தொடர்பாக ரூபா 15,738,441 நிலுவை கடன் மீதியொன்று காணப்பட்டதுடன் இந்த மொத்த நிலுவை கடன் மீதியில் 96 சதவீதம் அல்லது ரூபா 15,048,421 தொகை சிவில் உத்தியோகத்தர்களின் நிலுவைக் கடன் மீதிகளை உள்ளடக்கியிருந்தது. | நிலுவையாக உள்ள கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு தேவையான கடிதங்களை அனுப்பி வைத்தல், பிரதேச செயலாளர் ஊடாக சொத்து பதிவுகளை கோருதல், தேர்தல் அலுவலகத்திடமிருந்து முகவரிகளை கேட்டறிந்து கடிதம் அனுப்புதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எந்த பதிலும் இல்லாததால், சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறுதல், நிலுவையாக உள்ள ஆதனக் கடன்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகளை எடுத்தல், அனைத்து நடவடிக்கைகளின் முடிவிலும் நிலுவையாக உள்ள கடன் மீதிகளை பதிவழிப்பதற்கான சாத்தியத்தன்மையை கருத்தில் கொள்ளுதல் மற்றும் ஓய்வூதியத் திணைக்களத்திடமிருந்து இறந்த மற்றும் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களின் தகவல்களைப் பெற்று கணக்கீடு செய்யப்படாத கொடுப்பனவுகளை கணக்கீடு செய்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | வினைத்திறனானதும் செயற்திறனானதுமான முறைமையொன்று உருவாக்கப்பட வேண்டியதுடன் உத்தியோகத்தர்களிடமிருந்து பெறவேண்டிய மீதிகளை விரைவாக அறவீடு செய்வதற்கு கடன் விபரங்கள் நாளதுவரையாக்கப்பட்ட முறையில் பேணப்பட வேண்டும். |
| (ஆ) | தாபன விதிக்கோவையின் xxiv ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பதவி வறிதாக்கப்பட்ட உத்தியோகத்தர்களிடம் இருந்து முற்பண மீதிகளை அறவிட முடியாத பட்சத்தில் பிணைதாரர் அல்லது வாரிசுகளிடமிருந்து நிலுவைகளை அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கைகள் பின்பற்றப்பட வேண்டும். எனினும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமல் இறந்த/ ஓய்வு | நிலுவையாக உள்ள கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு தேவையான கடிதங்களை அனுப்பி வைத்தல், பிரதேச செயலாளர் ஊடாக சொத்து பதிவுகளை கோருதல், தேர்தல் அலுவலகத்திடமிருந்து முகவரிகளை கேட்டறிந்து கடிதம் அனுப்புதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எந்த பதிலும் இல்லாததால், சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெறுதல், நிலுவையாக உள்ள ஆதனக் கடன்கள் தொடர்பாக சட்ட நடவடிக்கைகளை | வினைத்திறனானதும் செயற்திறனானதுமான முறைமையொன்று உருவாக்கப்பட வேண்டியதுடன் உத்தியோகத்தர்களிடமிருந்து பெறவேண்டிய மீதிகளை விரைவாக அறவீடு செய்வதற்கு கடன் விபரங்கள் நாளதுவரையாக்கப்பட்ட முறையில் பேணப்பட வேண்டும். |

| | |
|---|---|
| பெற்ற/ பதவி வறிதாக்கப்பட்ட சிவில் உத்தியோகத்தர்களிடம் இருந்து பெறப்பட வேண்டிய ரூபா 15,738,441 கடன் மீதிகள் நிலுவையாக உள்ள கடன் மீதிகளாக குறிப்பிடப்பட்டிருந்ததுடன் அதில் 05 ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவையாக உள்ள ரூபா 9,707,517 கடன் மீதி உள்ளடங்கியிருந்தது. | எடுத்தல், அனைத்து நடவடிக்கைகளின் முடிவிலும் நிலுவையாக உள்ள கடன் மீதிகளை பதிவழிப்பதற்கான சாத்தியத்தன்மையை கருத்தில் கொள்ளுதல் மற்றும் ஓய்வூதியத் திணைக்களத்திடமிருந்து இறந்த மற்றும் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களின் தகவல்களைப் பெற்று கணக்கீடு செய்யப்படாத கொடுப்பனவுகளை கணக்கீடு செய்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |

## 2.5 வங்கி கணக்குகளை செயற்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வங்கிக் கூற்றுக்களை பரீட்சித்த போது வங்கி நடைமுறைக் கணக்கொன்றில் ரூபா 281,561,099 (ஐ.அ.டொலர் 1,393,866.83) கூட்டுமொத்த பெறுமதியான 5 இனங்காணப்படாத வைப்பு மீதிகள் இருந்தமை அவதானிக்கப்பட்டது. அதில் ரூபா 53,418,900 (ஐ.அ.டொலர் 264,450) பெறுமதியான வைப்புக்கள் 2022 மார்ச் 25 வரையிலும் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | இலங்கை விமானப்படையின் வெளிநாட்டு நாணய வங்கிக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டுள்ள வெளிநாட்டு நாணயம் (ஐ.அ.டொலர்கள்) தொடர்பான அறிக்கை ஐக்கிய நாடுகள் அமைப்பிடமிருந்து இதுவரை கிடைத்திருக்காததுடன் தொடர்புடைய செலவு வைத்தல்கள் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் ஊடாக ஐக்கிய நாடுகள் சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | வங்கிக் கூற்றுக்களில் இனங்காணப்படாத செலவு வைத்தல்கள் முறையாக இனங்காணப்பட்டு கணக்குகளில் உள்ளடக்கப்பட வேண்டும். |

## 2.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| (i) 128 1 (ஆ) | கணக்கீட்டு உத்தியோகத்தர் அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய சரியான கட்டணத்தை நிர்ணயிப்பதற்கு | 2021 திசெம்பர் 15 இல் புதிய மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட்டு, முறையான நடவடிக்கைக்காக 2021.12.31 இல் சம்பளம் | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் அராங்கத்திற்கு செலுத்த வேண்டிய |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் கட்டுநாயக்க விமானப்படை முகாமில் உள்ள 316 உத்தியோகத்தர் குடியிருப்பு இல்லங்களின் பொருளாதார வாடகையை அறவீடு செய்வதில் விலைமதிப்பீட்டு திணைக்களத்தினால் மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கான செல்லுபடியாகும் காலம் மீறப்பட்டுள்ளது. 05 வருடங்களுக்கும் மேலாக பழைய மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை அறவிடப்பட்டுள்ளது. | மற்றும் பதிவுப் பிரிவுக்கு அனுப்பப்பட்டது. | கட்டணங்களை நிர்ணயிப்பதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தர் கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 128 (2) உ | வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய வருமான நிலுவைகளை சேகரிப்பதற்கு விசேட ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய போதிலும் 10 அரசாங்க நிறுவனங்கள் மற்றும் 02 தனியார் நிறுவனங்களிடமிருந்து இலங்கை விமானப்படைக்கு பெறப்பட வேண்டிய ரூபா 12,674,073 கூட்டுமொத்தமான விமான வாடகை வருமானம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 3 மற்றும் 18 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட கால தாமதத்துடன் நிலுவையாக காணப்பட்டது. | புத்தகங்களில் இருந்து இதனை நீக்குவதற்கு பாதுகாப்பு அமைச்சிடம் அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது. இதற்கான பதிலில் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் செயலாளர்களை அழைத்து மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு நிதி அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. புத்தகங்களில் இருந்து நிலுவையாக உள்ள வருமானத்தை நீக்குவதற்காக பாதுகாப்பு அமைச்சுக்கு நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய வருமான நிலுவைகளை தாமதமின்றி சேகரிப்பதற்கு வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர் வினைத்திறனா ன நிகழ்ச்சித்திட்டத் தை அமுல்ப்படுத்த வேண்டும். |
| (iii) | 231 (1) | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களில் முடிந்தவரை வேறு எந்த ஆவணத்தையும் பார்க்காமல் தவறுகளைக் கண்டறியக்கூடியதாக அனைத்து விபரங்களும் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் அந்த விதிமுறைகளிலிருந்து விலகி சிற்றுண்டி செலவினங்களிற்காக | இலங்கை விமானப்படைக்கு சிற்றுண்டி வழங்கும் போது பாதுகாப்பு மற்றும் இரகசியம் போன்ற காரணங்களால் இந்த நிலைமை ஏற்பட்டது. 2021 ஆகஸ்ட் முதல் இந்த நிலைமையை சீர்செய்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | நிதிப்பிரமாணங் களின் பிரகாரம் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்க ளில் உள்ளடக்கப்பட வேண்டிய அனைத்து விபரங்களும் உள்ளடக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மீளாய்வாண்டின் போது 21 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்ட ரூபா 4,566,882 கூட்டுமொத்த தொகை செலவினத் தலைப்பு 224-1-2-1203 மூலம் Officers' Mess இற்கு செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | தாபன விதிக் கோவையின் xix ஆம் அத்தியாயத்தின் 5.2 ஆம் பிரிவு | அட்டவணைப்படுத்தப்பட்ட இல்லங்களிற்கு உரித்தற்ற திருமணமான உத்தியோகத்தர்களிடமிருந்து அவர்களது சம்பளத்தில் 12 ½ சதவீதம் அறவிடப்பட வேண்டிய போதிலும் கொழும்பு விமானப்படைத் தளம் மற்றும் கட்டுநாயக்க விமானப்படைத் தளம் ஆகியவற்றிற்குரிய உத்தியோகத்தர் இல்லங்களின் உரிய வாடகை அதற்கிணங்க அறவிடப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் அட்டவணைப்படுத்தப்பட்ட இல்லங்களிற்கு உரித்தற்ற உத்தியோகத்தர்களிற்கு 10 சதவீத பொருளாதார வாடகையை அறவீடு செய்வதால் 2021 ஆம் ஆண்டில் கொழும்பு விமானப்படைத் தளத்தில் உள்ள 221 உத்தியோகத்தர்களின் இல்லங்களுக்கான ரூபா 3,626,103 வீட்டு வாடகை வருமானத்தை அரசாங்கம் இழந்திருந்ததுடன் 2021 ஆம் ஆண்டில் கட்டுநாயக்க விமானப்படை முகாமில் உள்ள 302 இல்லங்களுக்கான வீட்டு வாடகையில் ரூபா 12,635,218 தொகையை அரசாங்கம் இழந்திருந்தது. | 2006 திசெம்பர் 14 ஆம் திகதிய பாதுகாப்பு அமைச்சின் டி/520/ஈரீ/11/3 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் matrimonial வீடுகளில் வசிக்கும் பணியாளர்களிடமிருந்து அடிப்படை ஊதியத்தில் பத்து சதவீதம் வீட்டு வாடகையாக அறவிடப்பட்டது. | தாபன விதிக்கோவை ஏற்பாடுகளின் பிரகாரம் அரசாங்கத்திற்கு அறவிடப்பட வேண்டிய கட்டணங்கள் இனங்காணப்பட்டு அரசாங்க வருமானத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை விமானப்படையின் 70வது ஆண்டு விழாவில் கலந்து கொண்ட சம்பந்தப்பட்ட உள்ளூர்/வெளிநாட்டு அதிகாரிகளுக்கு ஹோட்டல் தங்குமிடத்தை வழங்குவதற்காக SLAF நலன்புரி நிதியத்திலிருந்து ரூபா 5,256,425 தொகை செலுத்தப்பட்டு, பின்னர் விமானப்படையின் செலவினத் தலைப்பிலிருந்து மீள்நிரப்பு செய்யப்பட்டிருந்தது. எனினும், கேள்வி நடைமுறையை பின்பற்றாமல் இந்த விநியோக சேவை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அரசாங்க பெறுகை வழிகாட்டல்களின் 1.2.1 (அ) வழிகாட்டலின் பிரகாரம் குறைந்தபட்ச கிரயத்தில் சேவைகள் பெறப்பட்டுள்ளன என்பதை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியவில்லை. | சில நாட்களுக்கு முன்னர் இலங்கை விமானப்படையின் 70வது ஆண்டு நிறைவு விழாவிற்கு வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் வருகை உறுதிப்படுத்தப்பட்டமை, கொவிட் தொற்று காரணமாக பெறுகை செயன்முறையுடன் இணங்கத் தவறியமை, கடன் வசதிகளுடன் கூடிய ஹோட்டல்களைப் பெற்றுக்கொள்ள முடியாமை போன்ற காரணங்களால், தங்குமிட வசதிகளை வழங்குவதில் விருந்தினர்களின் நலன்களைக் கவனித்து, பெறுகை நடைமுறையைப் பின்பற்ற முடியவில்லை. | பெறுகை வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளின் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | அரசாங்க பெறுகை வழிகாட்டல்களின் 4.3.3 ஆம் வழிகாட்டலின் பிரகாரம் மொத்த கிரய மதிப்பீட்டின் திருத்தம் இலங்கை விமானப்படையால் அங்கீகரிக்கப்பட வேண்டும், அதேநேரம் 2020 யூலை 07 இல் குவான்புர வைத்தியசாலைக்கு ரூபா 1,125,000 பெறுமதியான Diathermy இயந்திரத்தை கொள்வனவு செய்யும் போது ரூபா 900,000 ஆரம்ப கிரய மதிப்பீடு யதார்த்தமாக தயாரிக்கப்படாததால் இது பெறுகைக் குழு உறுப்பினர்களின் அங்கீகாரத்தை | பெறுகையின் மேலதிக செயற்பாடுகளை விரைவுபடுத்தும் பொருட்டு தலைவரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் அமுல்ப்படுத்தப்பட்டு, பின்னர் குழு உறுப்பினர்களின் அங்கீகாரம் பெறப்பட்டது. | பெறுகை வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளின் பிரகாரம் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெற்றுக்கொள்ளாமல் பெறுகை குழுவின் தலைவரின் அங்கீகாரத்துடன் மாத்திரமே ரூபா 1,125,000 ஆக திருத்தப்பட்டிருந்தது. | | |
| (இ) | 2004 முதல் 2014 வரையான காலப்பகுதியின் போது 37 சந்தர்ப்பங்களில் வெளிநாட்டு பழுதுபார்த்தல்கள், பழுதுபார்த்தல் பெறுமதி, கழிவு பெறுமதி என்பவற்றிற்காக புதிய கொள்வனவுகளாக முறையே ஐ.அ.டொலர் 536,000, ஐ.அ.டொலர் 130,525.28 மற்றும் ஐ.அ.டொலர் 91,821.80 உள்ளடங்கிய ஐ.அ.டொலர் 758,347.08 (ரூபா 153,183,110.16) கூட்டுமொத்த தொகை செலுத்தப்பட்டிருந்தது. அதேபோன்று, பெறுமதி குறிப்பிடப்படாத 64 விமான உதிரி பாகங்கள் மற்றும் 07 விமான உதிரி பாகங்கள் 7 முதல் 17 வருடங்களாக விமானப்படைக்கு கிடைத்திருக்கவில்லை. | விமான உதிரிப் பாகங்கள் பெறுகை அங்கீகாரத்துடன் அனுப்பப்பட்டுள்ளன. விசாரணைகள் பரிந்துரைகளுக்காக நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன. பரிந்துரைகள் அங்கீகரிக்கப்பட்டவுடன் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்ட சொத்துக்களின் முறையான மேற்பார்வை பேணப்பட வேண்டியதுடன் அந்தச் சொத்துக்களை திருத்தம் செய்து மீளப்பெறுவதற்கான வினைத்திறனான முறைமை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 செப்தெம்பர் 22 இல் கட்டுநாயக்க விமானப்படை முகாமின் எரிபொருள் களஞ்சிய பிரிவுக்கு ரூபா 500,000 கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட எரிபொருள் விநியோக பம்ப் எவ்வித பயன்பாடும் இன்றி கிட்டத்தட்ட 05 வருடங்களாக விளைவற்றிருந்தது. அந்த இயந்திரத்தின் உத்தரவாதக் காலப்பகுதி 2018 செப்தெம்பர் 22 இல் காலாவதியாகியிருந்தது. | எரிபொருள் விநியோக பம்ப் ஏதாவது செயலிழக்கும் சமயத்தில் தடையின்றி எரிபொருள் விநியோகத்தை உறுதிசெய்வதற்காகவும், வெளிநாட்டில் இருந்து இதனை கட்டளையிட்டு தேவையை பூர்த்தி செய்வதற்கு நீண்ட காலம் எடுக்கும் என்பதால், அத்தகைய செயலிழந்த எரிபொருள் பம்பை மாற்றுவதற்கு எந்த நேரத்திலும் பயன்படுத்துவதற்காக இது கட்டுநாயக்க பிரதான களஞ்சியங்களில் இது வைக்கப்பட்டுள்ளது. | நிறுவனத்தால் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் வினைத்திறனாகவும் திறமையாகவும் பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2015 யூலை 10 ஆம் திகதிய 02.∵.205 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 12 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் அகற்றப்படுவதற்கு இனங்காணப்பட்ட வாகனங்கள் ஆண்டுதோறும் அகற்றப்பட வேண்டிய போதிலும் அந்த ஏற்பாடுகளிற்கு முரணாக இலங்கை விமானப்படை தள முகாமில் உள்ள கட்டுநாயக்க வாகன திருத்தம் மற்றும் அகற்றல் பிரிவில் 61 வாகனங்கள் 06 வருடங்களாக அப்புறப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 61 வாகனங்களை அகற்றுவது தொடர்பான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போது இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறதுடன் உடனடியாக பாதுகாப்பு அமைச்சிடம் அதனை கையளிப்பதற்கு தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் அப்புறப்படுத்தப்பட வேண்டிய சொத்துக்கள் சரியாக இனங்காணப்பட்டு உரிய நேரத்தில் அகற்றப்பட வேண்டும். |
| (இ) | கட்டுநாயக்க விமானப்படை தள முகாம் தொடர்பான முப்பத்தேழு உத்தியோகத்தர் விடுதிகள் 02 மாதங்கள் முதல் 11 வருடங்கள் வரை பாழடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் இருந்தன. அதன் பிரகாரம் 102 உத்தியோகத்தர்கள் உத்தியோகத்தர் விடுதிகளிற்கான காத்திருப்போர் பட்டியலில் உள்ள நிலையில், பாழடைந்த 37 உத்தியோகத்தர் விடுதிகள் பழுதுபார்த்து குடியிருப்பதற்காக அவர்களிற்கு வழங்கப்படாததால் கட்டிட வாடகை வருமானமாக அரசாங்கத்தால் அறவிடப்பட்டிருக்கக்கூடிய ரூபா 5,718,900 தொகை இழக்கப்பட்டிருந்தது. | உத்தியோகத்தர் விடுதிகளின் புனரமைப்பிற்கு தேவையான நிதியேற்பாடுகளை பெற்றுக்கொள்வதற்காக இம் முகாம் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் A&I நிகழ்ச்சித்திட்டங்களுக்கான முன்மொழிவுகளைச் சமர்ப்பித்துள்ள போதிலும் நிதி நெருக்கடி காரணமாக அந்த முன்மொழிவுகள் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. பணி சேவை பிரிவில் புனரமைப்பதற்காக ஒப்படைக்கப்பட்ட எந்தவொரு உத்தியோகத்தர் விடுதியும் முறையாக புனரமைக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | திருத்தம் செய்யப்பட வேண்டிய மற்றும் புனரமைக்கப்பட வேண்டிய சொத்துக்களை நிறுவனத்தின் திறமையான முறையின் மூலம் திருத்தம் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | நிதிப்பிரமாணம் 128 (1) (ஆ) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தர் அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய கட்டணத்தை முறையாக நிர்ணயம் செய்து முழுமையாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த விதிமுறைகளுக்கு முரணாக கட்டுநாயக்க விமானப்படை முகாம் மற்றும் கொழும்பு விமானப்படை முகாமில் உள்ள 15 அரசாங்க கட்டிடங்களை வெளித் தரப்பினருக்கு வழங்குவதில் அரசாங்க பிரதான விலைமதிப்பீட்டாளர் மாதாந்த வாடகையை மதிப்பீடு செய்திருந்தார். எனினும் இலங்கை | வெளி தரப்பினருக்கு குத்தகை அடிப்படையில் சொத்துக்களை வழங்குவதன் மூலம் இலங்கை விமானப்படைக்கு கிடைத்த வருமானம் அரசாங்க நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் செயற்படுமாறு சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் அரசாங்கத்திற்கு செலுத்த வேண்டிய கட்டணத்தை முறையாக நிர்ணயம் செய்து முழுமையாக அறவீடு செய்வதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தர் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விமானப்படையின் நிர்வாகப் பணிப்பாளரின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் இணங்கப்பட்ட பெறுமதியின் ஒரு பகுதி அரசாங்க வருமானமாக செலவு வைக்கப்பட்டதுடன் மீதமுள்ள பணம் பொதுத்துறை அல்லாத நிதியங்களிற்கு செலவு வைக்கப்பட்டது. இதனால், அரசாங்கத்திற்கு 2021 சனவரி முதல் நவம்பர் வரை ரூபா 11,596,650 கூட்டுமொத்தமான வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | | |
| (உ) | 2011 நவம்பர் 30 ஆம் திகதிய விமானப்படை கட்டளை இலக்கம் 852 இன் 5 ஆம் பநிதியின் பிரகாரம் இலங்கை விமானப்படை தலைமையகம், பல்வேறு முகாம்கள் மற்றும் பிரிவுகளில் உள்ளக நிதியங்கள் நிறுவப்பட்டுள்ளன. இலங்கை விமானப்படையின் பௌதீக மற்றும் மனித வளங்கள் இந்த நிதியங்களின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காகவும் நிதியங்களால் செயற்படுத்தப்படும் இலாபம் ஈட்டும் செயற்திட்டங்களுக்காகவும் பயன்படுத்தப்பட்டன. நிதிப்பிரமாணம் 154 இன் பிரகாரம் இந்த உள்ளக நிதியங்கள் சட்டப்பூர்வ நிதியங்களாக நிறுவப்படாததால், அந்த நிதியங்களின் விவகாரங்கள் திறைசேரி மற்றும் இலங்கை பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டிருக்கவில்லை என்பது மேலும் அவதானிக்கப்பட்டது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் ஏற்பாடுகளின் பிரகாரமும் 2016 யூன் 24 இல் நடைபெற்ற பொதுக் கணக்குக் குழுவின் கூட்டத்தின் பணிப்புரைகளின் பிரகாரமும் இலாபம் ஈட்டும் செயற்திட்டங்களின் நடவடிக்கைகளின் பாராளுமன்ற மேற்பார்வையை நெறிப்படுத்துவதற்கு பொறிமுறையொன்றை அமைப்பது அவசியமானதாகும். |

### 3.3 நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 நவம்பர் 26 ஆம் திகதிய அரச கணக்குகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் 2021/3 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டலின் 06 இன் குறிப்பு (1) இன் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய நட்டங்கள் மற்றும் | 2021 ஆம் ஆண்டில் நிதிப்பிரமாணங்கள் 102, 106, 113 இன் கீழ் வரும் சேதங்கள் அல்லது நட்டங்கள் எதுவும் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. | அரச கணக்குகள் சுற்றறிக்கைகள் மற்றும் நிதிப்பிரமாணங்களில் குறிப்பாக குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்களின் பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | விட்டுவிடுதல்கள் பற்றிய கூற்று (நி.பி. 106/113 இன் கீழான நட்டங்கள்) வருடாந்த நிதிக்கூற்றுக்களில் மேலும் அறவிடப்பட வேண்டிய அல்லது பதிவழிக்கப்படும் நட்டங்களை வெளிப்படுத்த வேண்டும். அந்த விதிமுறைக்கு முரணாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை விமானப்படையின் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து மேலும் அறவிடப்பட வேண்டிய அல்லது பதிவழிக்கப்பட வேண்டிய 154 நட்டங்கள் தொடர்பான ரூபா 386,194,141 கூட்டுமொத்த தொகை வருடாந்த நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | MI-17(SMH-4415) ஹெலிகொப்டர் தரையிறங்கும்போது ஏற்பட்ட விபத்து தொடர்பாக திறைசேரி செயலாளரால் 2021 ஒக்தோபர் 21 இல் நிதிப்பிரமாணம் 109 இன் கீழ் புத்தகத்தில் இருந்து பதிவழிக்கப்படுவதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்த நட்டத்தின் பெறுமதி ரூபா 105,255,389 ஆக காணப்பட்டதுடன் அது நிதிப்பிரமாணம் 109 இன் குறிப்பு (ii) இன் கீழ் புத்தகத்தில் இருந்து பதிவழித்தல் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டில் நிதிப்பிரமாணங்கள் 102, 106, 113 இன் கீழ் வரும் சேதங்கள் அல்லது நட்டங்கள் எதுவும் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. | அரச கணக்குகள் சுற்றறிக்கைகள் மற்றும் நிதிப்பிரமாணங்களில் குறிப்பாக குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 3.4 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தற்போது 1999 முதல் 2014 வரை கொள்வனவு செய்யப்பட்ட 198 அலகு டயர்களை பயன்படுத்தும் வாகனங்கள் விமானப்படையிடம் காணப்படவில்லை, அதன் பிரகாரம் ஆய்வு நடத்தாமல் தேவையான எல்லைக்கு அதிகமாக கொள்வனவு | இது அகற்றுவதற்காக பணிப்பாளர் சபைக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் பொருள் மெய்மையாய்வு அறிக்கை அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. | அவ் உருப்படிகளிற்கான பொருட்களை கொள்வனவு செய்யும் போது, முகாமைத்துவம் தேவைக்கேற்ப அவற்றை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

செய்ததால் 7 முதல் 22 ஆண்டுகள் வரையான காலமாக டயர்கள் மற்றும் டியூப்கள் களஞ்சியங்களில் தேங்கி இருப்பது வெளிப்படுத்தப்பட்டது.

### 3.5 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 06 இல் உள்ளவாறு கட்டுநாயக்க விமானப்படை தள முகாமின் எரிபொருள் பிரிவின் 04 எரிபொருள் இருப்புப் பொருட்களின் பௌதீக மீதியை அத்திகதியில் உள்ளவாறு கணனி மென்பொருள் முறைமையில் (EPASS) உள்ள மீதியுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது கடனில் வழங்கப்பட்ட எரிபொருள் இருப்பு கணனி மென்பொருள் முறைமையில் உள்ளடக்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. எனவே, கணனி முறைமையில் உள்ள இருப்பு மீதி ரூபா 29,451,200 கூட்டுமொத்தமான 222,944 லிட்டர் எரிபொருளால் அல்லது 48 சதவிகிதத்திலிருந்து 1137 சதவீதம் வரை சாதகமற்ற முறையில் மிகைப்படுத்தப்பட்டு காணப்பட்டது. | விமானங்கள் மற்றும் மோட்டார் வாகனங்களுக்கான எரிபொருள் இந்த கணனி மென்பொருள் முறைமையின் மூலம் நாளாந்தம் வழங்கப்படுவதில்லை என்பதால் இந்த வேறுபாடு உள்ளது. | கணினி முறைமையைக் கையாள்வதில், அனைத்து தரவுகளும் கணனி முறைமையில் சேர்க்கப்பட்டு நாளதுவரையாக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை விமானப்படை கொழும்பு முகாமின் கட்டிடத்தை வெளித் தரப்பினரிற்கு வாடகைக்கு விடுவது தொடர்பாக அரசாங்க விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் பிரதான மதிப்பீட்டாளரின் 2016 யூன் 10 ஆம் திகதிய சீஎம்/சீஎம்சீ/ஆர்பீ/666,668,669 ஆம் இலக்க மதிப்பீட்டு அறிக்கையில் குறித்த மதிப்பீட்டு அறிக்கையின் செல்லுபடியாகும் காலம் 3 ஆண்டுகளில் காலாவதியாகும் | விலைமதிப்பீட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்ட 06 கடிதங்களின் குறிப்புக்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. மேற்படி 06 கடிதங்கள் மூலம் இலங்கை விமானப்படை கொழும்பு முகாமின் காணிகள் மற்றும் கட்டிடங்களின் மதிப்பீடுகளை மேற்கொள்ளுமாறு விலைமதிப்பீட்டு திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | வெளித் தரப்பினருக்கு வாடகை அடிப்படையில் கட்டிடங்களை வழங்கும் போது அவற்றின் தற்போதைய மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகையை அறவீடு செய்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2016 யூன் 10 இற்குப் பின்னர் 6 ஆண்டுகள் தாமதத்துடன் கட்டிட வாடகை மதிப்பீடு செய்யப்படாமல் அதே கட்டிட வாடகை அறவிடப்பட்டிருந்தது. | | |
| (இ) | இலங்கை விமானப்படைத் தலைமையகத்தின் சிற்றுண்டிச்சாலை கட்டிடத்தை வாடகைக்கு எடுப்பது தொடர்பான மாதாந்த சந்தை வாடகை அரசாங்க மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 115,000 என மதிப்பிடப்பட்ட போதிலும், உடன்படிக்கை மேற்கொள்ளும் போது, அந்தத் தொகை மாதமொன்றிற்கு அரசாங்க நிதியத்திற்கு ரூபா 7,500 ஆகவும், பொதுத்துறையல்லாத நிதியத்திற்கு ரூபா 7,500 ஆகவும் ரூபா 100,000 குறைத்து அரசாங்கத்திற்கு சாதகமற்ற முறையில் செலவு வைக்கப்பட்டுள்ளது. இதனால் அரசாங்கத்திற்கு 2021 ஆம் ஆண்டில் ரூபா 1,200,000 வருமானம் இழக்கப்பட்டது. | இலங்கை விமானப்படையின் சிற்றுண்டிச்சாலையானது நலன்புரி விலைகளின் கீழ் தரமான உணவுகளை வழங்கும் நோக்கத்துடன் பேணப்பட்டு வந்ததுடன், இந்நோக்கத்திற்காக கேள்வி கோரும் போது ஒரு வழங்குநர் மாத்திரமே தனது கேள்வியை அனுப்பியிருந்ததுடன் தொடர்ச்சியான சேவையை வழங்குவதற்கான தேவைப்பாட்டின் அடிப்படையில் அதை பராமரிக்க முன்வந்த ஒரே வழங்குநருடன் சிற்றுண்டிச்சாலை பேணப்பட்டது. ரூபா 115.000 மதிப்பீட்டில் கேள்விகள் முன்வைக்கப்படாததால் தொடர்ச்சியான பராமரிப்பின் அவசியத்தை பூர்த்தி செய்வதற்காக இந்த விலைவீதத்திற்கு சிற்றுண்டிச்சாலை வழங்கப்பட்டது. | கட்டடங்களை வாடகைக்கு விடும் போது தற்போதுள்ள மதிப்பீட்டின் பிரகாரம் திறந்த கேள்விகள் கோரப்பட்டு கேள்வியை வழங்குவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் அங்கீகரிக்கப்பட்ட கட்டளையிடப்பட்ட உத்தியோகத்தர்களின் (commissioned officer) எண்ணிக்கை 2557 ஆக இருந்தது, அதில் 316 வெற்றிடங்கள் காணப்பட்டன. கட்டளையிடப்படாத (ஏனைய தரவரிசை) உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 34,381 ஆகவும், அதன் வெற்றிடங்கள் 3829 ஆகவும் காணப்பட்டன. 2602 ஏனைய தரவரிசை பதவிகளில் உள்ள அதிக எண்ணிக்கையிலான வெற்றிடங்கள் முன்னணி விமானம் மற்றும் விமான வீரர் தொடர்பானதாகும். | உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய தரவரிசை பதவிகளின் வெற்றிடங்களின் எண்ணிக்கை சரியாக உள்ளது. அதற்கான திறைசேரி அங்கீகாரம் கிடைத்தவுடன் இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்படும். | எதிர்பார்த்த நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு உதவும் ஒரு உகந்த பதவியணியினரை பேணுவதற்கு வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புகளை மேற்கொள்வதற்கான சரியான வழிமுறை நிறுவப்பட்டு பேணப்பட வேண்டும். |